தினமலர்
DINAMALAR
National Tamil Daily

# ‘எதிர்காலம் காக்கும் பல்லுயிர் தன்மை’

**கோவை, மே 23–**

இந்திய வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில் உயிரியல் பன்முகத்தன்மைக்கான சர்வதேச தின விழா, டிஜிட்டல் முறையில் ‘பேஸ்புக் லைவ்’ மூலம் கொண்டாடப்பட்டது.

மரப்பெருக்கு நிறுவனத்தில் செயல்படும், சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் சார்பில் நடத்தப்பட்ட விழாவில், ஒருங்கிணைப்பாளர் கண்ணன் வாரியர் வரவேற்றார்.

வன மரபியல் நிறுவன இயக்குனர் குன்னிகண்ணன் பேசுகையில், ‘‘உயிரியல் பன்முகத்தன்மை சேதமுற்றால் மனிதகுலம் பல இயற்கை வளங்களை இழக்க நேரிடும். நிலையான எதிர்காலத்துக்காக, பல்லுயிரியலை பாதுகாக்க, அனைவரும் ஒன்றிணைய வேண்டும்,’’ என்றார்.

மாணவர்கள், பொதுமக்களுக்காக, ‘உயிரியல் பன்முகத்தன்மையின் முக்கியத்துவம்’ என்ற தலைப்பில் மொபைல் புகைப்பட போட்டி நடத்தப்பட்டது. நடப்பாண்டு விழாவின் கருப்பொருளை விளக்கும் வகையில், விழிப்புணர்வு சுவரொட்டி வெளியிடப்பட்டது.

25. News in Dinamalar, Coimbatore, 23.05.2021, Observance of International Day for Biological Diversity by IFGTB ENVIS.